பக்கங்கள் 16+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 23 சனிக்கிழமை 06.07.2024 அதிர்வு 341

## தேசிய அரசு யோசனைக்கு பிரதான கட்சிகள் எதிர்ப்பு!

தேசிய அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முற்படுவாராயின் அதற்கு ஒத்துழைப்பு வழங்காதிருக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி திட்டமிட்டுள்ளது. 04



# பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடல் நாளை மாலை அக்கினியுடன் சங்கமம்

## | இறுதி ஊர்வலத்தில் பலரும் பங்கேற்க ஏற்பாடு |





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் திருகோணமலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை அக்கினியுடன் சங்கமமாகவுள்ளது.

பெருந்தலைவரின் புகழுடல் அன்னாரின் திருகோணமலை இல்லத்தில் நேற்று முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அங்கு பலரும் அன்னாரின் புகழுடலுக்கு உணர்வுபூர்மாக அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் இன்று வெளியாகியுள்ளது.

அதற்கமைய நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்பாக இறுதி அஞ்சலிகளை திருகோணமலை, தபால் கந்தோர் வீதியிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றார்கள். 04

# முன்னாள் போராளி மர்ம மரணம்

## விபத்தா? கொலையா? எனச் சந்தேகம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

பல்துறை ஆளுமை மிக்க “கம்பிகளின் மொழி பிறேம்“ என அழைக்கப்படும் கோபால கிருஷ்ணன் கோகுல் பிறேம் குமார் (வயது 42) என்ற குடும்பஸ்தரே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு அடம்பன் வீதியில் உள்ள தனது வீட்டுக்கு முன் நின்று அவர் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார்.

இதன்போது தன்னை வாகனத்தால் மோதி விட்டுச் சென்று விட்டனர் என அவர் சத்தம் போட்டுள்ளார்.

இதன்போது குடும்பத்தினரின் உதவியுடன் உடனடியாக அடம்பன் 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# இரு நாட்களாக வைத்திய சேவைகள் புறக்கணிப்பு: சாவகச்சேரி வைத்தியசாலைக்கு விரைந்த டக்ளஸ்



(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் வைத்தியர்கள் கடந்த இரு தினங்களாக வைத்திய சேவைகளை புறக்கணித்து வரும் நிலையில் இன்று காலை 6.30 மணிக்கு கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத் திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலைக்கு வருகை தந்து வைத்திய அத்தியட்சக ருடன் வைத்தியசாலை நிலவரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இதன்போது வைத்தியசாலையை மேம்படுத்த தன்னால் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளின்போது ஒரு சில வைத் தியர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு கள் இன்று வைத்தியசாலையை இவ் வாறானதொரு இக்கட்டு நிலைமைக் குக் கொண்டு சென்றிருப்பதாகவும், வைத்தியர்களின் பணிப் புறக்கணிப் புக் காரணமாக கடந்த 24 மணித்தி யாலங்களாகத் தனி ஒரு வைத்தியராக நின்று வைத்தியசாலையை இயங்க



வைத்து நோயாளர்களை காப்பாற்றி வருவதாகவும் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா இதன்போது தெரிவித்தார்.

இதனைவிட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியவற்றை இயங்க வைக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் – ஆளணி காணப்படுகின்றன என்றும் வைத்திய அத்தியட்சகர் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதன்போது வைத்தியசாலையில் கூடிய பொதுமக்கள், வைத்தியசாலை இன்று சனிக்கிழமை இரவுக்குள் வழமை போன்று இயங்க வேண்டும் என்றும், இல்லையேல் வைத்திய அத்தியட்ச கர் அர்ச்சுனாவுக்கு ஆதரவளித்தும் – வைத்தியசாலையை இயக்கக் கோரியும் மாபெரும் போராட்டத்தை முன்னெடுப் போம் என்றும் பொதுமக்கள் எச்சரித்த னர்.

# கதிர்காமக் கந்தன் மகோற்சவ விழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

## 17 நாட்கள் மதுபானசாலைகளுக்குப் பூட்டு

(ஆ.ரமேஸ்)

கதிர்காமக் கந்தன் ஆலய வரு டாந்த மகோற்சவ விழா இன்று கொடி யேற்றத்துடன் வைபவ ரீதியாக ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடாந்த மஹோற்சவ விழாவைக் கண்டுகளிக்க நாட்டில் பல பாகங்களிலும் இருந்து இலட்சக்கணக் கான பக்தர்கள் முருகன் தரிசனத்துக் காக படையெடுத்து வருவது வழமை யாகும்.

அதேநேரத்தில் கதிர்காமத்துக் குத் தரிசனத்துக்காக வருகை தரும் அடியார்களின் நன்மை கருதி அவர் களுக்கான பாதுகாப்பு, போக்கு வரத்து, தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு



நலத்திட்டங்களில் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படு கின்றது.

இந்தநிலையில் 2024ஆம் ஆண் டுக்கான எசல பண்டிகையை முன் னிட்டு கதிர்காம பிரதேச செயலகத்துக் குட்பட்ட அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் இன்று 6ஆம் திகதி முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை 17 நாட்களுக்கு முடக்கப்படும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள் ளது.

# தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரது இழப்பு பல்வேறு தரப்பிலும் ஆழமான உணர்வைத் தந்தது!

## அனுதாபச் செய்தியில் ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும், ஈழத் தமிழர்களின் தலைவராக போருக்குப் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டு காலம் அங்கீகரிக்கப்பட்டு வந்தவருமான ராஜவரோதயம் சம்பந்தனின் மறைவு பல்வேறு தரப்பினர் மத்தியிலும் ஆழமான உணர்வுகளை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு அனுதாபச் செய்தியில் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் மறைவை அடுத்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தனது இளம் வயதில் இருந்தே அரசியல் ஆர்வம் கொண்டிருந்த சம்பந்தன், 1961 இல் 28 வயதுடைய இளம் சட்டத்தரணியாக, தமிழரசுத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுடன் பனாகொடராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர் என்பது அதிகம் அறியப்பட்டிராத நிகழ்வாகும்.

1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது முதல் தீவிர அரசியலில் அவர் ஈடுபட ஆரம்பித்தார்.

1977 இல் திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் அரசியல் அரங்கில் அவர் நன்கு அறியப்பட்டிருந்தார்.

அவரின் ஆங்கில சொல்லாற்றலும் ஆளுமைப் பண்புகளும்' அரசியல் அவதானிகளின் கவனத்தைத் தேசிய மட்டத்தில் ஈர்க்கத் தொடங்கின.

1983 இல் அரசியல் சாசனத்தின் ஆறாவது திருத்தத்தின் விளைவாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூண்டோடு நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதன் பின்னர், மறைந்த தலைவர்கள் அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோருடன் சம்பந்தனும் இணைந்திருந்த 'மூவர் தலைமை' இந்திய அரசின் தீர்வு நடவடிக்கைகளில் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை 2001 இல் இருந்து நாடாளுமன்றத்தில் அவர் நிதானத்துடன் வழி நடத்தினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்ச்சியான அரசியல் ஆலோசனைகளிலும் அவர் பங்கெடுத்தார். போருக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் ஓர் இணக்கமான அரசியல் தீர்வுக்காகத் தொடர்ந்து அவர் பாடுபட்டார்.

ஆயினும், அவரின் முயற்சிகள் சிங்கள அரசியல் சக்திகளின் அதிகாரப் போட்டியில் அடிபட்டுப் போயின என்பது ஓர் வரலாற்றுச் சோகமாகும்.

சம்பந்தனைப் போன்ற ஓர் தமிழர் தலைவரின் காலத்தில் இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணத் தவறிய பாரிய வரலாற்றுத் தவறை எதிர்காலத்தில் சிங்கள அரசியல் தரப்புகள் நிச்சயம் உணர்ந்து கொள்ள வேண் டியிருக்கும். சம்பந்தன் பற்றிய உரிய அரசியல் மதிப்பீடாகவும் அதுவே இருக்கும்.– என்றுள்ளது.



# தேசிய மக்கள் ஆட்சியில் அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்படும்

## ஹரினி அமரசூரிய எம்.பி. தெரிவிப்பு



"சிறுபான்மையின மக்கள், இரண்டாந்தர பிரஜைகள் என இந்நாட்டில் எவரும் இல்லை. அனைவரும் இலங்கையர்கள். அனைவருக்கும் சம உரிமைகள் உள்ளன. தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் சம உரிமையை மக்கள் உணரும் வகையில் ஏற்பாடுகள் இடம்பெறும்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை அரசியல் சக்திகளே சீர்குலைத்துள்ளன. சிறுபான்மையினர், அவர்கள், இவர்கள் எனக் கூறும் சொல்லாடலையே நாம் நிறுத்த வேண்டும். நாம் அனைவரும் இலங்கைப் பிரஜைகள்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த நாட்டில் உள்ள எவருக்கும் இரண்டாந்தரப் பிரஜை என்ற உணர்வு, நிலை வராது. தமது இனம், மதம், மொழி, வாழும் பகுதி, பாலினம் மற்றும் கலாசாரம் என்பவற்றால் எவரும் இரண்டாந்தர பிரஜைகள் ஆகிவிடமுடியாது.

சம உரிமை என்பது பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், கலாசா ரீதியாகவும் என அனைத்து வகையிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கில் வாழும் சிங்கள மக்களுக்கோ அல்லது தெற்கில் வாழும் தமிழ் மக்களுக்கோ வேறுபாடு இருக்க முடியாது. இப்படியொரு நாட்டை உருவாக்க வேண்டுமெனில் இதுவரை காலமும் எமது நாட்டில் இந்தப் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஏற்க வேண்டும். அவற்றைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம உரிமை என்பது சொல்லலவில் மட்டும் இருந்து பயன் இல்லை. தமக்கு சம உரிமை கிடைக்கப் பெறுகின்றது என்பதை மக்கள் உணர வேண்டும்."

– என்றார்.



# சிகிச்சை மறுக்கப்பட்டதால் உயிரிழந்த குழந்தை

## விசாரணைகளை ஆரம்பித்தது சுகாதார அமைச்சு

மாத்தறை, கொடவில பகுதியில் உள்ள வைத்தியசாலையொன்றில் சிகிச்சை மறுக்கப்பட்டதால் இரண்டு மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி, மாத்தறை, கொடவில பகுதியில் உள்ள வைத்தியசாலையில் மூச்சுத்திணறல் காரணமாகப் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி மறுக்கப்பட்டது எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தேசிய அரசு...

தேசிய மட்டத்திலான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறான தொரு நகர்வுக்கு ஒத்துழைத்தால் அது கட்சிக்கு மேலும் பின்னடைவாக அமையக்கூடும் என்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தேசிய அரசமைக்கும் திட்டத்தை கடுமையாக எதிர்ப்போம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அறிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### முன்னாள் போராளி...

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று தெரியவருகின்றது.

சடலம் மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் பின்னர் மரணத்துக்கான காரணம் தெரியவரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### பெருந்தலைவர்...

சமயச் சடங்குகள் அதன்பின் ஆரம்பமாகும்.

அஞ்சலிக் கூட்டமும் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகி அன்னாரின் புகழுடல் தகனத்துக்காக மாலை 3 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தலைவரின் இறுதி ஊர்வலத்தில் அரசியல்வாதிகள், மத குருமார்கள், கல்விச் சமூகத்தினர், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை சம்பந்தன்

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் அஞ்சலி

ஈழத்தமிழர்களின் அரசியல் வேணவாக்களை மிதவாதப் போக்குடன் கையாண்ட தலைவர்களுள் மிக முக்கிய மானவர் காலஞ்சென்ற இரா.சம்பந்தன்.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் ஈழத்தமிழர்கள் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளை முன் கொண்டு சென்றதில் சம்பந்தனின் பங்களிப்பும் கனதியான இடத்தை வகிக்கின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு குறித்து யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள இரங்கல் செய் தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு,

ஈழத்தமிழர் போராட்டத்துக்கு முன் னான அரசியல், போராட்ட காலத்திலான அரசியல், போராட்டத்துக்குப் பின்னான அரசியல் என்று மூன்று தளங்களிலும் சர்வதேசத்தால் நன்கு அறியப்பட்ட அரசியல் தலைவர் இரா.சம்பந்தன்.

அவரது தலைமைத்துவத்தில் தமிழ்த் தேசிய பரப்பில் பல சவால்கள் எதிர் கொள்ளப்பட்டுள்ளன. சவால்கள் தோன்றும் போதெல்லாம் அவற்றின் உடனடி விளைவுகளை மையப்படுத்தி தீர்வுகளை அணுகாது தனது மென் போக்கு அணுகுமுறையினால் சவால் களை மாற்றுவழிகளில் கையாண்டவர் அவர். அந்தப் போக்கு அவரது தனித் துவ இயல்பாக மற்றவர்களால் கணிக் கப்பட்டது.

குடியரசுக் காலத்துக்குப் பின்னர் இலங்கை நாடாளுமன்றத்தில் அதிக காலம் அங்கத்துவம் வகித்த தமிழ்த் தலைவர் எனும் பெருமையையும் இரண்டாவது தமிழ் எதிர்க்கட்சித் தலை வர் எனும் பெருமையும் அவர் பெறு கின்றார். ஈழத் தமிழர்களின் வாழ்வியல் பூர்விகமான வடக்கு, கிழக்கு மண்ணை இணைத்து இரண்டு தரப்புக்களும் மதிப்புணர்வுடன் அணுகிய தலைவராக பார்க்கப்படுகிறார்.

இன்று காலமூப்பால் அவர் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் யாழ்ப் பாணத் தமிழ்ச் சங்கம் சார்பிலான அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள் கின்றோம்.- என்றுள்ளது.







# புத்தளம், சேனைக் குடியிருப்பு மக்களுக்கு மூக்குக் கண்ணாடிகள்

சந்நிதியான் ஆச்சிரம நிதிப் பங்களிப்பில் புத்தளம், சேனைக் குடியிருப்பு பல்லின கிராம மக்களுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆம் திகதி சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் ஏற்பாட்டில் புத்தளம் - சேனைக் குடியிருப்பு , மணற்குன்று கிராமத்தை சேர்ந்த மக்களுக்கு கண் மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்றன.

இதில் 86 பயனாளிகள் கலந்து கொண்டு கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு 70 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் மூக்கு கண்ணாடி புத்தளம் சேனைக்குடிருப்பில் வைத்து வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மொட்டுவின் திரிசங்கு நிலை

''கட்சிகளைப் பிரித்து, துண்டாக்கி, அதன் மூலம் வெற்றிகளை ஈட்டக்கூடிய ஓர் அரசியல் நிலைமை முன்னர் இருந்தது. ஆனால் இப்போது நிலைமை அதுவல்ல. கட்சிகளை உடைத்துத் தேர்தலில் வெற்றி பெற முடியாது.

''அப்படிக் கட்சியைப் பிரித்து தேர்தலில் வெற்றி பெறுவது என்பது காலாவதியாகி விட்ட உத்தி.''

- இவ்வாறு இப்போது அரசியல் தத்துவம் - கருத்து - கூறியிருக்கின்றார் மொட்டுக் கட்சியின் பிரமுகர் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

கட்சிகளை உடைத்து, எம்.பிக்களை அணி மாற வைத்து, அதன் மூலம் அரசியல் லாபமீட்டி, அரசியல் செய்து கொண்டிருந்தவர்கள் ராஜபக்ஷக்கள்தான். 2005 இல் இருந்து அதுதான் இலங்கையின் அரசியல் பண்பாக - கலாசாரமாக - மாறி வந்தது. அதற்கு வழி ஏற்படுத்தி, அந்தப் போக்கை வசமாகப் பயன்படுத்தி, அரசியல் செய்து கொண்டிருந்த பிரதான தரப்பு ராஜபக்ஷக்கள்தான்.

இப்போதும் ராஜபக்ஷக்கள் அரசியலில் நின்று பிடித்தாலும், அவர்களின் பக்கத்தில் உடனடியாக அதிகார வலிமைக்கு மீளவும் வரக்கூடியவர்கள் என்று நம்பிக்கை தரக்கூடிய பிரமுகர்கள் யாரும் இல்லை. அதனால் கட்சியை உடைத்து, அரசியல் நடத்தும் தந்திரத்தை பிரயோகிக்கும் நிலையில் அவர்கள் பக்கத்தில் அதிகார வலிமை பெறக் கூடிய தலைவர்கள் யாரும் இல்லை. அத்தோடு அவர்கள் பக்கம் வருவதற்கும் யாரும் இல்லை

அதனால் கட்சி பிரித்து, ஆள் கவரும் தந்திரத்தை இன்றைய சூழ்நிலையில் பயன்படுத்தவோ, பயன்படுத்தி வலிமை அடையவோ ராஜபக்ஷக்களுக்கு வாய்ப்பேதும் இப்போது இல்லை.

அதனால் அந்த முறைமை பயனற்றது, சரிவராது என்று தற்சமயம் 'எட்டாப்பழம் புளிக்கும்' என்ற தொனியில் கதை விடுகின்றார் நாமல் ராஜபக்ஷ.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில், இது நாமல் ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு பெரும் பின்னடைவு நேரம் என்று அரசியல் அவதானிகள் கருத்துக் கூறி வருகையிலேயே கட்சியைப் பிளவு படாமல் ஒன்றுபடுத்துவது குறித்து நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தல் விடுத்து வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிக்கு வாய்ப்பான ஒரு வேட்பாளரை நிறுத்த முடியாமல் இருக்கும் கட்சிகள் எல்லாமே தங்கள் கட்சிகளை உடையாமல் கட்டிக் காப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன என்பதுதான் நிலைமை.


நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு எம்.பியை மட்டும் வைத்து, அரசியல் எதிர்காலமே இன்றித் தடுமாறிக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி கூட இப்போது இருக்கும் வலிமை மேலும் தகர்ந்து விடாது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில்தான் இருக்கின்றது. அதற்கு காரணம் அக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க வரும் ஜனாதிபதி தேர்தலில் வென்று விட வாய்ப்பு இருப்பதாக நிலவும் ஒரு நம்பிக்கைதான்.

அது போலவே, இவ்வளவு அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஐக்கிய மக்கள் சக்தி உடைந்து விடாமல் வலிமையாக தாக்குப்பிடிப்பதும், ஜே.வி.பி. உட்பட தேசிய மக்கள் சக்தி மேலும் தனது வலிமையை மேம்படுத்தி வருவதும் அந்தந்தத் தரப்பின் வேட்பாளர்களான முறையே சஜித் பிரேமதாஸவும், அநுரகுமார திஸநாயக்கவும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாய்ப்பு உள்ளவர்களாகக் கருதப்படுவதுதான்.

அப்படி வாய்ப்புள்ள ஒரு வேட்பாளரை கொண்டிராத அல்லது வலிமையுள்ள ஒரு வேட்பாளர் பக்கம் உறுதியான நிலைப்பாடு எடுத்து சாய்ந்திராத தென்னிலங்கைக் கட்சிகள் இந்தத் தேர்தலை ஒட்டி உடைந்து, துண்டாகி, பிளந்து, பிரிந்து போகும் ஆபத்தைத்தான் எதிர்கொண்டிருக்கின்றன.

பழம்பெரும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிலைமையும் அத்தகையதுதான். அக்கட்சியில் வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வேட்பாளராக வரக்கூடிய அல்லது கருதப்படக்கூடிய ஒருவர் இல்லை. அதனால் எந்த வெற்றி வேட்பாளருடன் கூட்டு சேர்ந்து, அணி வகுத்து நிற்பது என்ற சர்ச்சையிலேயே அக்கட்சி துண்டுபட்டு நலிவுற்றுச் செல்கின்றது.

அந்த நெருக்கடி மொட்டுக் கட்சிக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதுதான் அரசியல் நிலைவரம். இப்போதைய நிலைமையை சமாளிக்க கட்சி வேண்டுமானால் ஒருவரை வேட்பாளராக தெரிவு செய்து, தானே நிறுத்தலாம். எனினும் வெற்றி வேட்பாளர் என்ற கருத்தை - எண்ணத்தை - நம்பிக்கையை - அவரால் இனி ஏற்படுத்த முடியாத சூழலில், அந்த முயற்சியும் அந்தக் கட்சியை மேலும் பிளந்து விடாது கட்டிக் காப்பதற்கு உதவ மாட்டாது என்பதுதான் நிலைமை.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் மர நடுகை

(எம். எப். நவாஸ்)

தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வார்த்தை அனுஷ்டிக்கும் முகமாக அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க வளாகத்தில் அரிய இன பழ மர கன்றுகளை நடும் நிகழ்வு இன்று (05) ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இந்த நிகழ்வானது பிரதேச செய லாளர் ரீ.எம்.எம்.அன்சாரின் பங்கு பற்றுதலில் முகாமைத்துவ பணிப் பாளரின் நெறிப்படுத்தலின் கீழ் ஒழுங்கு படுத்தப்பட்டு உதவிப் பிரதேச செய லாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர், கிராமசே வகர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நிலை மாறுகால நீதி செயலமர்வு



(எம். எப்.நவாஸ்)

இலங்கை தேசிய சமாதான பேரவை மற்றும் றுகுனு லங்கா இணைந்து அம்பாறை மாவட்ட அரச உத்தி யோகத்தர்களுக்கு நிலை மாறுகால நீதி சம்பந்தமாக மாவட்ட அளவிலான தகவல் அமர்வுகள் அட்டாளைச்சேனை பல் தேவை கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது .

இதில் இலங்கை தேசிய சமாதான பேரவை நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் ஜெகன் பெரேரா அட்டாளைச் சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கு.நஹீஜா முஷாபிர், றுகுனு லங்கா தலைவர் எம்.எஸ்.ஜஃபர், திட்ட முகாமையாளர் எம். எஸ்.எம்.அக்ரம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கலாச்சார உத்தியோகத்தர்கள், தேசிய ஒருமைப் பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# அரச அங்கீகார தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளராக றஜீவன்!



அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் – ஆங்கில மொழிபெயர்ப்பாளராக லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று(05) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திலுள்ள கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றி வரும் இவர் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுமானிப் பட்டத்தையும், களனிய பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் முதுமானிப் பட்டதாரியும் ஆவார்.

லயன்ஸ் கழங்களின் முக்கிய பல பொறுப்புக்களை வகித்து வரும் இவர் கல்வி, சமூகம் என பல்வேறு பணிகளை ஆற்றியும் வருகின்றார்.

இவர் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி திருமதி மேரிமெற்லின் தம்பதியினரின் இரண்டாவது புதல்வனும் ஆவார்.



# திருமலையில் மீன்பிடித் தொழிலை மட்டும் மேற்கொண்டு பிரதேசத்தையும் நாட்டையும் அபிவிருத்தி செய்ய முடியாது

## இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான முகாமைத்துவ பணிப்பாளர் பிரபாத் மளவிகே தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

உலகின் 2 ஆவது இயற்கை துறைமுகமான திருகோணமலையில் மீன்பிடித் தொழிலை மட்டும் மேற்கொண்டு, பிரதேசத்தையும் நாட்டையும் அபிவிருத்தி செய்ய முடியாது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான முகாமைத்துவ பணிப்பாளர் பிரபாத் மளவிகே இவ்வாறு கூறினார்.

நேற்று (05)திருகோணமலை நிலையான உட்கட்டமைப்புக்கான சமூக மன்றத்துக்கும், மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி தலைமையிலான அதிகாரிகள் குழுவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் திருகோணமலை துறைமுகத்தை அடிப்படையாக கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களால் துறைமுகத்தை சூழ வாழும் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்,

கொழும்பு துறைமுகத்துக்கு நிகரான, வருமானத்தை மிக அதிகளவில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு துறைமுகமாக திருகோணமலையை அபிவிருத்தி செய்ய முடியும். எனினும் பல்வேறு விதமான அரசியல் பின்புலங்களை கொண்ட எதிர்மறையான கருத்துக்களாலும் அதனடிப்படையில் காலத்துக்கு காலம் எழும் எதிர்ப்புகளாலும் இது சாத்தியமற்றுப் போயுள்ளது.

துறைமுகத்தை சூழவுள்ள காணிகள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டு விட்டன. இந்தக் காணிகளில் குடியிருப்பவர்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேற வேண்டும் என்ற அடிப்படையற்ற கருத்துக்களை நான் முற்றாக மறுக்கின்றேன்.

சிங்கபூர் நிறுவனத்தால் திருகோணமலையை மையமாகக்கொண்டு கிழக்கு மாகாணம் முழுவதையும் அபிவிருத்தி செய்யும் திட்ட முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது தற்போதுவரை வெறும் முன்மொழியாகவே உள்ளது. அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இறுதி தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

திருகோணமலை கப்பல்துறை பிரதேசத்தில் சூரியசக்தி மின்சாரம் பெறுவதற்கான செயற்த்திட்டம் ஒன்றிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இங்கிருந்து 10 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இந்த 10 மெகா வாட் மின்சாரத்தைத் தேசிய மின்கட்டமைப்புக்குள் உள்வாங்குவதற்கு உரிய கிரிட் கட்டமைப்பு வசதி இலங்கை மின்சார சபையிடம் தற்போது இல்லை. அதனால் இந்தத் திட்டமும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை இதுவே உண்மை நிலை.

நாங்கள் வருந்தி அழைத்தாலும் இங்கு வந்து பாரிய முதலீடுகளை செய்ய எந்த வெளிநாட்டு நிறுவனங்களும் இது வரை முன் வரவில்லை. காரணம் எமது நாட்டில் புதிய செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு அதிகளவான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றது. இதனை முதலீட்டாளர்கள் விரும்புவதில்லை. இரண்டு தடவைகள் சர்வதேச அளவில் முதலீட்டாளர்களை வரவழைப்பதற்கான விளம்பரங்களை செய்தும் யாரும் வரவில்லை.

எது எவ்வாறு இருப்பினும் பொது மக்களுக்குத் தீங்கான, அவர்களுக்கு நன்மை தராத எந்த அபிவிருத்தித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்பதை நான் தெளிவாக கூறுகின்றேன். மக்கள் குடியிருப்புகள் தவிர்ந்த, ஏனைய காணிகளும் பயன்படுத்தப்படாதிருக்கின்ற தரிசு நிலங்களுமே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.- என்று அவர் கூறினார்.

திருகோணமலை நிலையான உட்கட்டமைப்புக்கான சமூக மன்றத்தின் வேண்டுகோளை ஏற்று, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தின் உப மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த விசேட கலந்துரையாடலில், மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், இலங்கை துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளான திருகோணமலை துறைமுக வதிவிட முகாமையாளர் கே.என்.டபிள்யூ.வீரசிங்க, பிரதான முகாமையாளர் பிரதீப் நிசாந்த, பொறியிலாளர் எஸ்.எம்.சாதீக், பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் திருகோணமலை மாவட்ட மேலதிக பணிப்பாளர் ஏ.எம் நஸார், சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வீட்டில் சடலமாக மீட்கப்பட்டிருந்த மன்னார் தாதிய உத்தியோகத்தர்!

## மாரடைப்பால் இறந்துள்ளார் என்று மரண விசாரணையில் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பொது வைத்தியசாலையில் தாதியர் உத்தியோகத்தராகக் கடமை புரிந்து வரும் ஒருவர் வீட்டில் இருசந்து சடலமாக மீடகப்பட்டள்ளார்.

இறந்தவர் விடத்தல்தீவை பிறப்பிடமாகவும் , பனங்கட்டு கொட்டிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரண்டு பிள்ளைகளுக்கு தந்தை.

இவர் மன்னார் பொது வைத்தியசாலையில் தாதி உத்தியோகத்தராக கடமை புரிந்து வருகிறார். சூ.சுகிர்தராஜன் (வயது 38) என்பவரே இவ்வாறு சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மன்னார் மரண விசாரணை அதிகாரி திருமதி ஜூலிற் ஷியாமினி தயாளராஜன், இறந்தவரின் மனைவியிடம் மேற்கொண்ட விசாரணையில்,

தான் மன்னார் பொது வைத்திய சாலையில் தாதியராக கடமையாற்றி வருபவர் எனவும் தனது கணவரும் மன்னார் பொது வைத்தியசாலையில் தாதியர் உத்தியோகத்தராக கடமையாற்றியவர் என்றும் கடந்த திங்கள் கிழமை கடமைக்கு மாலையில் ஏழு மணியளவில் பறப்பட்டபோது கணவர் வீட்டில் இருந்தார் என்று தெரிவித்துள்ளார்.

பின் தான் மறுநாள் காலை 7 மணியளவில் வைத்தியசாலையில் தனது கடமையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு திரும்பியபோது அவர் அறையில் மரணித்த நிலையில் காணப்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து இடம்பெற்ற பிரேத பரிசோதனையில், மாரடைப்பாலேயே மரணம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினர் சொல்லின் செல்வர் செல்வவடிவேல் தலைமையில் பஞ்ச புராண ஓதுதலுடன் அரம்மானது.

இதில் அயில் வேலன் கவி எனும் தலைப்பில் உள வளத்துணையாளர் நா.நவராஜ் ஆன்மீக உரை நிகழ்த்தினார்.





இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, சந்நிதியான் ஆச்சிரமத்தால் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களுக்கு அம்பாறை உகந்தை முருகன் ஆலயத்தில் பல லட்சம் பெறுமதிகளில் சமையலுக்கு தேவையான உணவுப் பெருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. குடி தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன.

இதேவேளை, சிலாபம் முன்னேஸ்வரம் சிவாலயத்தில் கடந்த 03 ஆம் திகதி புதன்கிழமை திருவாசகம் முற்றோதல் இடம்பெற்றது.

இதில் சந்திதியான் ஆச்சிரம சுவாமிகள், சைவகலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், இந்தியாவில் இருந்து வருகை தந்த ஆன்மீகப் பெரியார்கள் என பல பேர் பங்கு கொண்டனர்.





# 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதயாத்திரீகர்கள் காட்டுப் பாதையூடாக இந்த முறை பாதயாத்திரை!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடி வேல்விழாவை ஒட்டிய பாத யாத்திரை வரலாறு காணாத வகையில் இந்த முறை களைகட்டியுள்ளது.

இதுவரை 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாதயாத்திரீகர்கள் கானகத்தினுள் பிரவேசித்து இருக்கின்றார்கள்.

கடந்த 30 ஆம் திகதி முதல் நாள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் காட்டுப் பாதை திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் சுமார் 7000 அடியார்கள் காட்டினுள் பிரவேசித்தனர். கடந்த ஆறு நாள்களாகப் பயணித்து நேற்றும் முன்தினமும் கதிர்காமத்தை சுமார் 5000 அடியார்கள் வந்தடைந்தனர்.

உகந்தமலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை ஒட்டிய கொடியேற்றம் இன்று ஆலய பிரதம குரு க.கு. சீதாராம் தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சுமார் 6000 அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

அதேவேளை இன்று கதிர்காம கந்த ஆலய கொடியேற்றம் பால்குடி பாபா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதேவேளை வடக்கு - கிழக்கிலிருந்து சுமார் 10000 அடியார்கள் கொடியேற்றத்தில் கலந்து கொண்டார்கள். எதிர்வரும் 11 ஆம் திகதிவரை காட்டுப் பாதை திறந்திருக்கும்.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் கடந்த 60 நாள்களின் பின்னர் நேற்று முன்தினம் கதிர்காமத்தை அடைந்து அவர்களது நேர்த்தியை பூர்த்தி செய்தனர்.

இன்னும் மட்டக்களப்பு திருகோணமலை அம்பாறை போன்ற பகுதிகளை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான யாதத்திரீகர்கள் தற்சமயம் காட்டில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

இம்முறை பயணம் அனைவருக்கும் சாதகமாக அமைந்திருந்தது. காலநிலை சிறப்பாக இருந்தது.

இரண்டு இடங்களில் பொலிஸ் மற்றும் ராணுவத்தினரின் கணக்கெடுப்பு இடம்பெற்றது.



சம்பந்தன் ஐயாவின் இறுதிக்கிரிகை தினத்தன்று

# கிழக்கில் வெள்ளைக்கொடி பறக்கவிட்டு துக்க தினமாகப் பிரகடனப்படுத்துங்கள்!

## கலீலுர்ரஹ்மான் கோரிக்கை

(எஸ்.அஷ்ரப்கான்)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் நாடாளுமன்ற சிரேஷ்ட உறுப்பினருமான அமரர் சட்டத்தரணி இரா. சம்பந்தனின் இறுதிக் கிரிகைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெறவுள்ளன.

அதில் இலங்கையின் அரசியல் பிரமுகர்களும், வெளிநாட்டு முக்கிய அரசியல்வாதிகளும் கலந்து கொள்ள உள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது இறுதிக் கிரிகை இடம்பெறும் நாளை ஞாயிற்றுக்கிழமை, கிழக்கின் சகல பிரதேசங்களிலும் வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்த இலங்கையர்கள் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் முன்வர வேண்டும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் அறிக்கை கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான உறவின் இணைப்பு பாலமாக விளங்கிய மூத்த அரசியல் ஆளுமை இரா. சம்பந்தனின் மறைவு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினையில் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உச்சபட்ச அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தனது வாழ்நாள் பூராவும் அயராது பாடுபட்ட அரசியல் ஆளுமையான சம்பந்தன் ஐயாவுக்கு நாங்கள் அஞ்சலி செலுத்த இலங்கையர்களான நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அன்னாரின் பிரிவுத் துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும் திருகோ



ணமலை மக்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளும் இந்த சந்தர்ப்பத்தில் அவரது மக்கள் பணியையும், அரசியல் சேவைகளையும் கௌரவிக்கும் விதமாக நல்லிணக்கத்தின் வெளிப்பாடாக அவரது இறுதிக் கிரிகை இடம் பெறும் நாளை ஞாயிற்றுக்கிழமை, கிழக்கின் சகல பிரதேசங்களிலும் வெள்ளைக்கொடியை பறக்கவிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்த இலங்கையர்கள் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் முன்வர வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறேன்.– என்று தெரிவித்துள்ளார்.





# சம்மாந்துறை சென்னல் கிராம ஆஸ்பத்திரி தேசிய மட்டத்தில் 8 ஆம் இடத்துக்குத் தெரிவு

(தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறையில் மிக நீண்டகாலமாக சென்னல் கிராமத்தில் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமானது சென்னல் கிராம பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டு ஓராண்டு நிறைவடைவதற்கு முன்பே தொற்றா நோய்களைக் கண்டறிவதற்கான ஆரம்ப கட்ட பரிசோதனைகளையும், சுகாதார ஆலோசனை களையும், வழிகாட்டல்களையும், மேற்கொண்டமைக்காக தேசிய மட்டத்தில் எட்டாம் இடத்தை பெற்றுள்ளது .

இதனை பெறுவதற்கு காரணமாக இருந்த இந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சுகாதார உதவியாளர்கள் அனைவரும் பாராட்டப்பட்டு வருகின்றனர்.



# உகந்தை முருகன் ஆலய கொடியேற்றம் இன்று!

**(வடிவேல் டினேஷ்)**

வரலாற்று சிறப்பு மிக்க உகந்தை முருகன் ஆலய கொடியேற்றம் இன்று (06) வெகு விமர்சையாக நூற்று கணக்கான பக்தர்கள் மத்தியில் இடம் பெற்றது.

தொடர்ந்து 18 நாள்கள் ஆலய திருவிழா இடம் பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தத்துடன் திருவிழா நிறைவு பெறவுள்ளது. அத்துடன் அக்கரைப்பற்று, பாணமை, பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, மண்டூர் உள்ளிட்ட பிரதேச மக்களின் பூசைகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளாந்த பூசைகள் அனைத்தும் ஆலய பிரதமகுரு , உற்சவகால பிரதம குரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இன்றைய கொடியேற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்டம் அரச அதிபர் சிந்திக்க அபேவிக்ரம மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபராக இருந்து பதவியுயர்வு பெற்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள வி.ஜெகதீஸன் ஆகியோர் கலந்து கொண்டனர்.









### ஆம்ஸ்ட்ராங் கொலை:

# சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனை முன்பு ஆதரவாளர்கள் சாலை மறியல் போராட்டம்





ஆம்ஸ்ட்ராங் கொலையில் சி.பி.ஐ. விசாரணை நடத்தக் கோரி அவரது உடல் வைக்கப்பட்டுள்ள சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனை அருகே திரண்ட அவரது ஆதரவாளர்கள், உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் பரபரப்பான காலை வேளையில் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே போக்குவரத்து ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக தடைபட்டுள்ளது.

உடற்கூராய்வு முடிந்தும் ஆம்ஸ்ட்ராங் உடலை வாங்க மறுத்து உறவினர்கள், ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போக்குவரத்து பாதிப்பு, மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு சிரமம், ரயில் நிலையத்துக்கு செல்வோருக்கு சிரமம் எனப் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டதால் பொலிஸார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தையில் சமாதானம் ஏற்படாததால் ஆம்ஸ்ட்ராங் ஆதரவாளர்கள் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் ஆம்ஸ்ட்ராங்குக்கு இறுதி அஞ்சலி செலுத்த வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 8 பேரை கைது செய்து தனிப்படை பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ரவுடி ஆற்காடு சுரேஷ் கொலை வழக்கில் பழி தீர்க்க இந்தப் படுகொலை நடத்தப்பட்டதா என்ற கோணத்திலும் விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் சமூகவலைத்தள பதிவில்,

"பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பேரதிர்ச்சியையும் பெரும் வருத்தத்தையும் அளிக்கிறது. கொலையில் சம்பந்தப்பட்டவர்களை பொலிஸார் இரவோடு இரவாகக் கைது செய்துள்ளனர்.

ஆம்ஸ்ட்ராங்கை இழந்து வாடும் அவரது கட்சியினர், குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, வழக்கை விரைவாக நடத்தி, குற்றவாளிகளுக்குச் சட்டப்படி உரிய தண்டனை பெற்றுத்தரக் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் ஆம்ஸ்ட்ராங் ஆதரவாளர்கள், உறவினர்கள் சமாதானம் அடையாமல் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை அருகே சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். ஆம்ஸ்ட்ராங் கொலையில் சி.பி.ஐ. விசாரணை தேவை என ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பியுள்ளனர்.

பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் நேற்று முன்தினம் இரவு படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை தொடர்பாக 10 தனிப் படைகளை அமைக்கப்பட்டு கொலையாளிகளை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த நிலையில், இந்தக் கொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் தப்பிச்செல்லும் பரபரப்பான வீடியோ காட்சிகள் தற்போது வெளியாகி வைரலாகி வருகிறது. இதை அடிப்படையாக வைத்தும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆம்ஸ்ட்ராங்குக்கு அஞ்சலி செலுத்துவதற்கு வருகிறேன் அனைவரும் அமைதி காக்கவும்: மாயாவதி கோரிக்கை

"பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங்குக்கு இறுதி அஞ்சலி செலுத்த நாளை சென்னை வர திட்டமிட்டுள்ளேன். ஆம்ஸ்ட்ராங் ஆதரவாளர்கள் அமைதியையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டுகிறேன்."

- இவ்வாறு பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி தெரிவித்துள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் நேற்று முன்தினம் அவரது வீட்டருகே படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் இ.பி.எஸ், தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



தேசிய அளவில் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரும் கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி எக்ஸ் சமூக வலைதளத்தில் இன்று பகிர்ந்துள்ள பதிவில்,

"பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக தலைவர் கே.ஆம்ஸ்ட்ராங் நேற்று மாலை சென்னையில் அவரது வீட்டுக்கு வெளியே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அர்ப்பணிப்பும், கடின உழைப்பும் கூடிய தலைவர் அவர். அவரது படுகொலை நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்களைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மிகவும் வேதனைக்குரிய இச்சம்பவத்தின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு நாளை (ஞாயிறு) சென்னைக்கு நேரில் சென்று ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு அஞ்சலி செலுத்த திட்டமிட்டுள்ளேன். அவருடைய குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்கவுள்ளேன். இத்தருணத்தில் அனைவரும் அமைதியையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.





# ஈரான் ஜனாதிபதித் தேர்தல்: மசூத் பெசெஸ்கியன் வெற்றி

தெஹ்ரான்,ஜூலை06

ஈரான் ஜனாதிபதித் தேர்தலில் மசூத் பெசெஸ்கியன் வெற்றி பெற்றார்.

ஈரான் அதிபரை தேர்ந்தெடுக்க நேற்று 2 ஆம் சுற்று வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடந்த நிலையில் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியாகியுள்ளன.

ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி, கடந்த மாதம் 19 ஆம் திகதி ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்தமையை யடுத்து, புதிய அதிபரை தேர்ந்தெடுக்க கடந்த 28 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இதில் நாடு முழுவதும் 40 சதவீத வாக்குகள் அதாவது, 2.55 கோடி வாக்குகள் பதிவாகின. அதிகபட்சமாக முன்னாள் நிதி அமைச்சர் மசூத் பெசெஸ்கியன் 42.5 சதவீத வாக்குகள் பெற்றார். சயீது ஜலீலி 38.6 சதவீத வாக்குகளை பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தார். இந்த முடிவுகளின்படி மசூத் பெசெஸ்கியன் அதிகபட்ச வாக்குகளை பெற்றிருந்தாலும், ஈரான் நாட்டின் சட்டத்தின்படி அதிபர் தேர்தலில் வெற்றி பெற, 50 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டியது கட்டாயமாகும்.

அவ்வாறு பெறாவிட்டால், முதல் இரண்டு இடங்களில் உள்ள வேட்பாளர்களுக்கு இடையே 2 ஆம் சுற்று தேர்தல் நடத்தப்படும்.

அந்த வகையில், அதிகபட்ச வாக்குகளைப் பெற்று முதல் இரண்டு இடங்களில் இருக்கும் வேட்பாளர்கள் மசூத் பெசெஸ்கியன் மற்றும் சயீது ஜலீலி ஆகிய இருவருக்கும் இடையிலான இரண்டாம் சுற்றுத் தேர்தல் நேற்று நடைபெற்றது. உள்ளூர் நேரப்படி காலை 8 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது. இதில், மசூத் பெசெஸ்கியன் வெற்றி பெற்றுள்ளார். தற்போது வரை எண்ணப்பட்ட 3 கோடி வாக்குகளில் 1.7 கோடி வாக்குகள் மசூத் பெஸ்கியனுக்கு கிடைத்து இருப்பதாகவும் ஜலிலிக்கு 1.3 கோடி வாக்குகள் கிடைத்து இருப்பதாகவும் ஈரான் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# சகலருக்குமே உரிய மதிப்பும் அங்கீகாரமும் அளிக்கப்படும் என பிரி. புதிய பிரதமர் உறுதி

லண்டன்,ஜூலை06

பிரிட்டனின் புதிய பிரதமராக ஸ்டார்மரை மன்னர் சார்லஸ் நியமித்தார்.



பிரிட்டன் நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 650 தொகுதிகளுக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி, பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி, லிபரெல் டெமோகிராட்ஸ் கட்சி ஆகியவை வேட்பாளர்களை நிறுத்தி இருந்தன.

தேர்தல் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 121 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

எதிர்க்கட்சியான தொழிலாளர்கள் கட்சி 400க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் 14 ஆண்டுகளுக்கு பிறகு கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வி அடைந்துள்ளது. இதன் மூலம் தொழிலாளர் கட்சி பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைக்க உள்ளது. தேர்தலில் தோல்வியடைந்ததை தொடர்ந்து, தனது பிரதமர் பதவியை ரிஷி சுனக் ராஜினாமா செய்தார்.

இதனை தொடர்ந்து, ஆட்சிய மைக்க தொழிலாளர் கட்சியின் தலைவர் ஸ்டார்மருக்கு மன்னர் சார்லஸ் அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பினை ஏற்று பக்கிங்காம் அரண்மனைக்கு ஸ்டார்மர் சென்றர். தொடர்ந்து பிரிட்டனின் புதிய பிரதமாராக ஸ்டார்மரை மன்னர் நியமித்தார். பிரிட்டனின் புதிய பிரதமராக ஸ்டார்மர் நியமிக்கப்பட்டமையை பக்கிங்காம் அரண்மனை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில், பிரிட்டனின் புதிய பிரதமர் ஸ்டார்மர் அந்நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:-

“பாதுகாப்பற்ற உலக சூழலில் சவால்களை எதிர்கொள்ள காத்திருக்கிறோம். மகிழ்ச்சியானதொடக்கத்தை உணர்வோம். மாற்றத்திற்கான பணி உடனடியாக தொடங்கும் என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் பிரிட்டனை மீண்டும் கட்டியெழுப்புவோம் என்பதில் சந்தேகமில்லை.

புறக்கணிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கப்படும். அனைத்து தரப்பு மக்களுக்கும் உரிய மதிப்பும் அங்கீகாரமும் அளிக்கப்படும். உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படும்.”


- இவ்வாறு அவர் பேசினார்.

கனடா முரசு

பக்கங்கள் - 4

சனிக்கிழமை 06/07/2024

## றொறன்றோவில் எலித் தொல்லை



கனடாவின் றொறான்ரோ நகரில் எலித் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. C2 ▶



# கறுப்பு ஜுலை: வெளிப்படையான இனப்படுகொலை

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

## கனடியத் தமிழர் பேரவை அறிக்கை

ஒன்ராரியோ, ஜுலை 6

சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகள் மறைமுகமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கறுப்பு ஜுலை ஒரு வெளிப்படையான இனப்படுகொலைச் செயலாகும் என கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

கறுப்பு ஜுலை தொடர்பில் கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

C2 ▶

## உயர் வீட்டு வாடகையால் கனடாவில் இடம்பெயர்வு



கனடாவின் உயர் வீட்டு வாடகை காரணமாக, புதிதாக புலம்பெயர்ந்தவர்களில் பலர், வேறொரு மாகாணத்திற்குச் செல்வது அல்லது நாட்டை விட்டு வெளியேறுவது குறித்துத் திட்டமிட்டு வருகிறார்கள் என சமீபத்திய கருத்துக்கணிப்பொன்று தெரிவிக்கிறது.

கனடாவில், வீட்டு வாடகைக் கொடுப்பது என்பது பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. Angus Reid Institute (ARI) என்னும் ஆய்வமைப்பு நடத்திய கருத்துக்கணிப்பொன்று, கனடாவின் உயர் வீட்டு வாடகை காரணமாக, கனேடியர்களில் 28 சதவிகிதத்தினர் வேறொரு மாகாணத்திற்குச் செல்வது குறித்து தீவிரமாக திட்டமிட்டுவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளது.

C2 ▶




# வேலையற்றோர் விகிதம் கனடாவில் அதிகரிப்பு!

ஒன்ராரியோ, ஜூலை 6 – கனடாவின் வேலையற்றோர் விகிதம் மீண்டும் அதிகரித்துள்ளதாக கனடிய புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்தில் வேலையற்றோர் விகிதம் 6.4 சதவீதமாக அதிகரித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் இரண்டு ஆண்டுகளில் வேலையற்றோர் விகிதம் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது.

கனடிய பொருளாதாரம் ஜூன் மாதத்தில் 1,400 வேலைகளை இழந்துள்ளது.

மே மாதம் வேலையற்றோர் விகிதம் 6.2 சதவீதமாக பதிவாகியிருந்தது.

கனடிய மத்திய வங்கி எதிர்வரும் 24ஆம் திகதி, தனது அடுத்த வட்டி விகித முடிவை அறிவிக்க உள்ள நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

ஏப்ரல் 2023 முதல் வேலையற்றோர் விகிதம் அதிகரித்து வருவதாக புள்ளி விவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## உயர்வீட்டு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

18 சதவிகிதத்தினர் ஆல்பர்ட்டாவுக்கு செல்ல திட்டமிட்டுவரும் நிலையில், நாட்டை விட்டு வெளியேறவும் சிலர் திட்டமிட்டுவருகிறார்கள்.

நாட்டில் 16 சதவிகிதம் பேருக்கு மட்டுமே சொந்த வீடு இருக்கும் நிலையில், வீடு வாங்குவது பிரச்சினையாக இருந்ததுபோக, இப்போது வீட்டு வாடகை கொடுப்பதே கடினமாக மாறியுள்ளது.

புதிதாக புலம்பெயர்ந்தவர்களில் சுமார் 40 சதவீதம் பேர், உயர் வீட்டு வாடகை காரணமாக, நாட்டை விட்டே வெளியேறுவது குறித்து திட்டமிட்டு வருகின்றனர் எனவும் அந்த ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன.

## றொறன்ரோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றொறன்ரோ நகர சபையின் இரண்டு உறுப்பினர்கள்

இது தொடர்பில் விசேட கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எலிகள் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றன எனவும், அதிக எண்ணிக்கையிலான எலிகள் காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளாகவே இவ்வாறு எலித்தொல்லை அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாகக் கட்டுமானப் பணிகள் அதிகரித்துள்ளன எனவும், மக்கள் நடைபாதைகளின் ஓரத்தில் குப்பைகளை – குறிப்பாக உணவு பொருள்களை – போடுவதனால் எலிகள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் நடைபாதைகளில் எலிகள் தாராளமாக அங்கும் இங்கும் ஓடுவதை அவதானிக்க முடிவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதிகளவு வீடுகள் நிர்மாணிக்கப்படுவதாகவும் இதனால் எலித் தொல்லை மேலும் அதிகரிக்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எலித் தொல்லையை இல்லாது ஒழிப்பதற்கு கூட்டு முயற்சியை அவசியம் எனவும் கிரமமான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கறுப்பு ஜூலை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழர் வரலாற்றில் சோகமான அத்தியாயமான கறுப்பு ஜூலையின் 41 ஆவது ஆண்டு நினைவு இந்த ஆண்டு அனுஷ்டிக்கப்படுகின்றது. ஜூலை 1983 இல், வன்முறைக் கலவரங்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அவர்களது வீடுகள் எரிக்கப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகள் மறைமுகமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கறுப்பு ஜூலை ஒரு வெளிப்படையான இனப்படுகொலைச் செயலாகும். பல தமிழர்கள் தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறி உலகம் முழுவதும் தஞ்சம் புக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பெரும் துன்பங்களின் காலம் அது.

'தமிழன் இல்லாத தேசம் இல்லை, தமிழனுக்கு என்றொரு தேசமும் இல்லை'. இந்த உறுத்தலான உண்மை, நமது வரலாற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதோடு அவை மாற்றப்படவோ அழிக்கப்படவோ கூடாது என்பதை உறுதிப்படுத்துகிறது.

கறுப்பு ஜூலையில் உயிர் பிழைத்தவர்களிடமிருந்து சாட்சியங்களை சேகரித்து ஆவணப்படுத்துவதற்கு கனடிய தமிழர் பேரவை அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது. நாங்கள் ஏற்கனவே பல கதைகளை ஆவணப்படுத்தியுள்ளோம், இப்போது இந்த முக்கியமான வேலையைத் தொடர உங்கள் உதவி தேவை. இந்த கொடிய நினைவுகளை அனுபவித்தவர்கள் அனைவரும் எழுந்து நின்று தங்கள் உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு அழைக்கிறோம். நமது வருங்கால சந்ததியினர், நமது வரலாற்றில் இந்த இருண்ட காலகட்டத்தைப் புரிந்து கொள்ளவும், கற்றுக் கொள்ளவும் உங்கள் வலி, இழப்பு மற்றும் மீண்டெழுந்த கதைகள் முக்கியமானவை.

நாம் அமைதியாக இருந்தால், இந்த கதைகள் என்றென்றும் யாருக்கும் கடத்தப்படாமல் நீர்த்துப்போய்விடும். உலகெங்கிலும் உள்ள இந்தக் கொடிய நாள்களை கடந்து உயிர் மீண்டவர்கள் முன் வந்து தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு செய்வதன் மூலம், நமது வரலாறு பாதுகாக்கப்படுவதையும், நமது வருங்கால சந்ததியினர் நாம் அனுபவித்த கொடுமைகளைப் பற்றி அறிந்து கொள்வதையும் உறுதி செய்ய முடியும்.

உங்களுக்குத் தெரிந்த இந்த கொடிய நாள்களை கடந்து வந்தவர்களுக்கு இந்த செய்தியை பகிர்ந்துகொள்வதோடு சாட்சியமளிக்க அவர்களை ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

எங்கள் சமூகம் மிகுந்த வலியையும், துரோகத்தையும், துன்பத்தையும் தாங்கிக் கொண்டது. ஆனால் நாங்கள் ஒருபோதும் நம்பிக்கை இழந்தவர்கள் இல்லை. நாங்கள் தொடர்ந்து நீதிக்காக போராடுகிறோம், நியாயமான தீர்வுக்காக வாதிடுகிறோம்.

கறுப்பு ஜூலையின் 41 ஆவது ஆண்டை நாம் நினைவுகூரும் அதே வேளை இந்த கருப்பு நாள்களிற்கு சாட்சியமாய் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் அனைவரும் முன்வந்து அவர்களின் கதைகளை எதிர்காலத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் அழைக்கிறோம். கறுப்பு ஜூலையின் நினைவை என்றும் மறக்க முடியாது என்பதை உறுதி செய்வோம்.

எங்கள் கறுப்பு ஜூலை இணையதளத்தில் இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட அனைத்து கதைகளையும் நீங்கள் பார்க்கலாம்: blackjuly83.com.

கறுப்பு ஜூலை நாட்களை நேரில் கண்ட சாட்சியமாக வாழ்ந்துகொண்டிருப்பவர்களை அழைக்கின்றோம்: உங்கள் கதைகளை உலகிற்கு பகிருங்கள்.

நீங்கள் கறுப்பு ஜூலை கலவரத்தின் சாட்சியாக இருந்திருந்தால் உங்கள் குரல் எங்களுக்குத் தேவை. உங்கள் சாட்சியைப் பகிர்வதன் மூலம் எங்கள் வரலாற்றைப் பாதுகாக்க உதவுங்கள். இந்த முக்கியமான ஆவணப்படுத்தலில் பங்கேற்க கனடியத் தமிழர் பேரவையைத் தொடர்பு கொள்ளவும். உங்கள் நினைவுகள் முக்கியமானவை. – என்று உள்ளது.

# எதிர்காலம் நம்பிக்கை நிறைந்ததாக உள்ளது

# கனடியத் தமிழர் பேரவைத் தலைவர் செய்தி

**ஒன்ராரியோ, ஜூலை 6**

எதிர்காலம் நம்பிக்கை நிறைந்ததாக இருப்பதாக கனடியத் தமிழர் பேரவையின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள குமார் இரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் –

"கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராக பொறுப்பேற்றுக் கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 2009 முதல் நான் பேரவையின் உறுப்பினராகவும் தன்னார்வத் தொண்டராகவும் இருந்து வருவதில் பெருமையடைந்து, எமது சமூகத்தில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்திய பல வெற்றிகளுக்கு சாட்சியாகவும் பங்களித்துமிருக்கின்றேன்.

இருப்பினும், எமது பேரவை சமீபத்தில் சில சவால்களை எதிர்கொண்டிருந்தது. செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் வலுவான குரலின் தேவை பற்றிய உங்கள் கருத்துக்களை நான் புரிந்துகொண்டிருக்கின்றேன். வெளிப்படைத்தன்மை, ஒத்துழைப்பு மற்றும் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்திட்டங்களால் கட்டமைக்கப்படவுள்ள புதிய நாளையை வழிநடத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

எமது எதிர்கால குறிக்கோள்கள்:

உங்கள் குரலை அனைவரும் கேட்கச்செய்வது: அதிக செயல்திறனுக்கான குழுச்செயல்பாடுகளுக்கு அதிகாரமளிப்பதன் மூலம், கனடா, இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் மிகவும் சக்திவாய்ந்த அமைப்பாக மாறுவோம்.

வெளிப்படைத்தன்மையை பேணுதல்: எங்களின் புதுப்பிக்கப்பட்ட இணையதளம், சமூக ஊடகம் மற்றும் புதிய மின்னஞ்சல் செய்திமடல் மூலம் அனைத்து தகவல்களும் சிறந்த முறையில் அனைவருக்கும் தெரிவிக்கப்படும். கூடுதலாக, மெய்நிகர் கருத்து பரிமாற்ற சந்திப்புக்கள் மற்றும் ஆய்வுகள் மூலம் அனைவரது கருத்துக்களும் கருத்தில் கொள்ளப்படும்.



நிலையானவாய்ப்புகளைஉருவாக்குதல்: எங்கள் சமூகத்திற்கான பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் முதலீட்டை உறுதிசெய்து, வலுவான ஆதார உத்திகளை உருவாக்க, கூட்டாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவோம்.

உறுப்பினர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடு: உடனுக்குடனான தகவல் பரிமாற்றங்கள் மூலம் அனைத்து பேரவையின் முன்முயற்சிகள், அதன் ஆணைகள் மற்றும் செயற்திட்டங்கள் யாவும் அனைத்து அங்கத்தவர்களுக்கு முறையாக தெரிவிக்கப்படுவதை உறுதி செய்வோம்.

எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்: இது கனடிய தமிழர் பேரவைக்கான புதிய அத்தியாயம், உங்களின் பங்கேற்பு எங்களுக்குத் தேவை.

எங்களுடன் உங்களை இணைத்துக்கொள்ள: புதுப்பிக்கப்படவுள்ள தகவல் தொடர்பு வழிகள் மூலம் எங்களுடன் இணைந்திருங்கள்.

உங்கள் குரலைப் பகிர்ந்துகொள்ளுங்கள்: கருத்து மன்றங்கள், இணையத்தள விவாதங்கள் மற்றும் கருத்துக்கணிப்புகளில் பங்கேற்கவும்.

உங்கள் திறமைகளை எமது சமூகத்துடன் பகிர்ந்துகொள்ளுங்கள்: எங்கள் சமூக செயற்திட்டங்களில் உற்சாகமான தன்னார்வ வாய்ப்புகளை நாங்கள் வழங்குவுள்ளோம்.

ஒன்றாக இணைந்து, வெளிப்படைத் தன்மையோடு செயற்படும்போது, திறமையான முடிவுகளை வழங்கும் வலுவான, மிகவும் பயனுள்ள பேரவையை உருவாக்க முடியும். கனடிய தமிழர் பேரவையானது தமிழ்ச் சமூகத்திற்காக ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக விளங்கும் மரபைக் கொண்டுள்ளது. இதை தொடர்ந்து கொண்டுசெல்வதற்கும், நாம் சேவை செய்பவர்களுக்காக குரல் கொடுப்பதற்குமான எதிர்காலம் இப்போது நம் கைகளில் உள்ளது.

இந்த பயணத்தில் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள். ஏதேனும் ஐயப்பாடுகள் இருந்தால் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டு பதில்களை பெற்றுக்கொள்ளலாம்.

நம்பிக்கை நிறைந்தது எதிர்காலம்"

– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் குறித்து எதிரணி ஆட்சேபம்!

## தங்கள் அரசில் அவரை மாற்றுவோம் என்கிறது கன்சர்வேட்டிவ் கட்சி

ஒன்ராரியோ, ஜூலை 6 – கனடிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்குவதற்கு நியமிக்கப்பட்டவரை தமது அரசாங்கம் அகற்றும் என கன்சர்வேட்டிவ் கட்சி தெரிவித்துள்ளது.

லிபரல் அரசாங்கத்தால் இந்த பதவிக்கு பிர்ஜு டட்டானி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அடுத்த மாதம் கனடிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை ஆணையாளராக பதவியேற்க உள்ளார்.

ஐந்தாண்டு காலத்திற்கு இந்தப் பதவி காலம் நீடிக்கவுள்ளது.



எனினும், இந்த நியமனத்தை கன்சர்வேட்டிவ் கட்சி இரத்து செய்யும் என கட்சியின் துணைத் தலைவர்களில் ஒருவரான மெலிசா லான்ட்ஸ்மன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவது உட்பட இஸ்ரேல் விரோத நிலைப்பாடுகளை பிர்ஜு டட்டானி கொண்டுள்ளார் என லான்ட்ஸ்மன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவரைப் பதவி விலகக் கோர வேண்டும் அல்லது அவரை பதவி நீக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.




# வர்த்தகர்களையும், பொது மக்களையும் மிரட்டி பணம் பறித்த குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைது

## பீல் பிராந்திய பொலிஸார் நடவடிக்கை

**ஒன்ராரியோ, ஜூலை 6**

வர்த்தகர்களையும், பொது மக்களையும் மிரட்டி பணம் பறித்த குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணையில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பீல் பிராந்திய பொலிஸார் முன்னெடுத்து வந்த விசாரணையின் அடிப்படையில் ஐவர் கைதாகியுள்ளனர்.

இவர்கள் தொடர்ச்சியான வன்முறை மூலம் பலரையும் மிரட்டிப் பணம் பறித்தனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

2023 டிசம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு மே மாதம் வரை இந்த சம்பவங்கள் நிகழ்ந்தன எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பீல் பிராந்தியத்திலும், டொரன்டோ பெரும்பாகத்திலும் இதில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளடங்கியுள்ளனர் எனவும், அவர்கள் அச்சுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் உள்ளனர் எனவும் பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

கைதானவர்கள் மொத்தம் 14 குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர்.

தெற்காசிய வணிக சமூகத்தை குறிவைத்து பல பணம் பறிக்கும் சம்பவங்கள் தொடர்பாக பீல் பிராந்திய பொலிஸார் கடந்த டிசம்பர் மாதம் முதல் விசாரணை செய்து வருகின்றனர்.

இப்போது அறிவிக்கப்பட்ட கைதுகள் கடந்த டிசம்பர் மாதம் ஆரம்பமான விசாரணையுடன் தொடர்புடையனவா என்பது குறித்த தகவல்களை பொலிஸார் வெளியிடவில்லை.




# LCBO மது விற்பனை நிலையங்களின் 10 ஆயிரம் ஊழியர்கள் வேலைநிறுத்தம்

**ஒன்ராரியோ, ஜூலை 6**

ஒன்ராரியோவின் மதுபான விற்பனை மையமான LCBOயின் ஊழியர்களின் வரலாற்றின் முதலாவது வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

ஒன்ராரியோ பொதுச் சேவை ஊழியர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் பத்தாயிரம் LCBO ஊழியர்கள் வெள்ளிக்கிழமை (05) நள்ளிரவு 12:01 மணி முதல் சட்டப்பூர்வ வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

நேற்று ஆரம்பமான வேலை நிறுத்தம் காரணமாக அனைத்து LCBO கடைகளும் மூடப்பட்டுள்ளன.

அடுத்த இரண்டு வாரங்களுக்கு மாகாண ரீதியில் 669 LCBO கடைகள் மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலை நிறுத்தக் காலத்தில், வாடிக்கையாளர்கள் இணையதளம், கைபேசி செயலி மூலம் மதுபானங்களை கொள்வனவு செய்யலாம் என LCBO குறிப்பிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் எட்டப்படவில்லை என்றால், 32 LCBO கடைகள் மாகாணம் முழுவதும் ஜூலை 19 முதல் திறக்கப்படும் என LCBO கூறியுள்ளது.

ஆனால் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வரையறுக்கப்பட்ட நேரங்களில் இந்த LCBO கடைகள் செயல்படும் என தெரியவருகிறது.